


**02.06.2025**

**தலைப்பு செய்திகள்**

- சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் 81ஆவது ஆண்டு பொதுக்கூட்டத்தில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்றுமாலை பங்கேற்கிறார்.
- இளைஞர் மகளிர் வளர்ச்சியை இலக்காக கொண்டு மத்திய அரசு செயலாற்றி வருவதாக உள்துறை இணை அமைச்சர் திரு.நித்தியானந்த ராய் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் பாடபுத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் விநியோகத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் துவக்கிவைத்தார்.
- சென்னை அண்ணா பல்கலைகழக மாணவி வன்கொடுமை வழக்கு குற்றவாளிக்கு 30 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதித்து மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் - ஜெர்மனியின் **Tom**–ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

********

**பிரதமர் - பராகுவே அதிபர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி பராகுவே அதிபர் சாண்டியாகோ பெனா பெலாசியோசு-வை இன்று புதுதில்லியில் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

புதுதில்லி ஹைதராபாத் இல்லத்தில் நடைபெறும் இந்த பேச்சுவார்த்தையில் இருதரப்பு உறவுகளை முன்னெடுத்து செல்வது குறித்து விவாதிக்கப்படுவதாக தெரிகிறது.

வேளாண்மை, வர்த்தகம், சுகாதாரம், மருந்தியல் பிரிவு, தகவல் தொழில்நுட்பத்துறையில் பராகுவே நாட்டுடன் மேம்பட்ட ஒத்துழைப்பு நிலவி வரும் நிலையில் இதனை வலுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெறுகிறது.

3 நாள் அரசு முறை பயணமாக இந்தியா வந்த பராகுவே அதிபரை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வரவேற்று இந்தியா பராகுவே இடையிலான ஒத்துழைப்பை பல்வேறு துறைகளில் மேம்படுத்த திரு.சாண்டியாகோ மேற்கொண்ட பாராட்டினார்.

பிரதமருடனான பராகுவே அதிபரின் பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமையும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

திரு.சாண்டியாகோ குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர், ஆகியோரையும் சந்தித்து பேச உள்ளார்.

முன்னதாக ராஜ்கோட்டில் தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் பராகுவே அதிபர் அஞ்சலி செலுத்தினார்.

இதனிடையே பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்றுமாலை சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் 81ஆவது ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார்.

விமான துறை எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகள் குறித்து இதில் விவாதிக்கப்படுகிறது.

********

**நித்தியானந்த ராய்**

நம் நாட்டை வரும் 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி அடைந்த நாடாக உருவாக்க மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக உள்துறை இணை அமைச்சர் திரு.நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இளைஞர்களுக்கான வாய்ப்புகள், மகளிருக்கான மரியாதை, நாட்டை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு முனைப்புடன் ஈடுபட்டுள்ளதாக கூறினார்.

********

**மாநிலங்களவை தேர்தல்**

தமிழகம் அஸ்ஸாம் மாநிலங்களில் காலியாக உள்ள மாநிலங்களவை உறுப்பினர் பதவியிடங்களுக்கு வரும் 19ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கியது.

தமிழ்நாட்டில் 6 இடங்களுக்கு நடைபெறும் தேர்தலில் திமுக சார்பில் 3 வேட்பாளர்களும், திமுகவின் ஆதரவுடன் மக்கள் நீதிமய்யம் சார்பில் ஒருவரும்,

அஇஅதிமுக சார்பில் 2 பேரும் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

வரும் 9ஆம் தேதியுடன் வேட்பு மனு தாக்கல் நிறைவடைகிறது.

மதிமுக பொதுச்செயலர் திரு.வைகோ, பா.ம.கவின் திரு.அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட 6 பேரின் பதவிக்காலம் அடுத்த மாதம் 24ஆம் தேதியுடன் முடிவடைவதால் இத்தேர்தல் நடைபெறுகிறது.

********

**அனைத்துகட்சி குழு**

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளிடையே எடுத்துரைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள 7 நாடாளுமன்ற அனைத்து கட்சி பிரதிநிதி குழுவினர் பல்வேறு நாடுகளுக்கு பயணித்து வருகின்றனர்.

தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் கட்சி உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர் தங்களது எத்தியோப்பிய பயணத்தை முடித்துக்கொண்டு இன்று எகிப்து சென்றடைந்துள்ளனர்.

ஐக்கிய ஜனதாதள் உறுப்பினர் திரு.சஞ்சய் குமார் ஜா தலைமையிலான பிரதிநிதி குழு கோலாலம்பூரிலும்,

சிவ்சேனா உறுப்பினர் திரு.ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழு லிபேரியாவிலும் இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் உயர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.

தற்போது பிரேசிலில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர் திரு.சசிதரூர் தலைமையிலான குழு நாளை அமெரிக்கா செல்கிறது.

********

**H.D குமாரசாமி**

மின்சார கார்கள் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளதாக மத்திய கன ரக தொழில்துறை அமைச்சர் திரு.H.D குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த திட்டத்தின் மூலம் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள மின்வாகன உற்பத்தியாளர்களிடமிருந்து முதலீடுகளை ஈர்க்க இந்த திட்டம் வழிகோலும் என்றார்.

இதன்மூலம் மின்சார வாகன உற்பத்தி பிரிவில் இந்தியா உலகளாவிய நாடாக முன்னேற வாய்ப்பு ஏற்படும் என்று கூறினார்.

********

**முதலமைச்சர் - பள்ளிகள்**

தமிழ்நாட்டில் 2025 – 26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள் சீருடைகள் நோட்டு புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரண பொருட்கள் விநியோகத்தை சென்னை திருவல்லிக்கேணி மேல்நிலைப்பள்ளியில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டில் கோடை விடுமுறைக்கு பின்னர் பள்ளிகள் இன்று மீண்டும் திறக்கப்பட்ட நிலையில் பள்ளி வந்த மாணாக்கரை மேள தாளத்துடன் இனிப்புகளை வழங்கி ஆசிரியர்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

**மதுரை ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள்** மேல்நிலைப்பள்ளியில் மாநில வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தியும்,

**திருவள்ளூர் மாவட்டத்தில்** மாநில அமைச்சர் திரு.நாசரும்

காஞ்சிபுரத்தில் திரு.ஆர்.காந்தியும் கல்வி உபகரணங்களை வழங்கினர்.

திருச்சி தேனி, தூத்துக்குடி, அரியலூர், வேலூர் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மாணாக்கருக்கு பாடபுத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் சீருடைகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டன

மாநிலம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் 2 லட்சத்து 50 ஆயிரம் மாணாக்கர் இந்தாண்டு புதிதாக சேர்ந்துள்ளதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

********

**சேகர்பாபு**

திருச்சி சமயபுரம், திருச்செந்தூர் திருவண்ணாமலை திருத்தணி திருப்பரங்குன்றம் மருதமலை உள்ளிட்ட 10 திருக்கோவில்களில் பச்சிளம் குழந்தைகளுக்கு தினசரி காய்ச்சிய பால் வழங்கும் திட்டத்தை மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு இன்று திருச்செந்தூரில் தொடங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இக்கோவில்களில் தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் பச்சிளம் குழந்தைகளுக்காக இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 7ஆம் தேதி நடைபெறும் என்றும், 400 கோடி ரூபாய் செலவில் 7 நாட்கள் இவ்விழா நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

**வாய்ஸ்**

********

**ஞானசேகரன்**

சென்னை அண்ணா பல்கலைகழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கு குற்றவாளியான ஞானசேகரனுக்கு 30 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதித்து சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கில் அவருக்கு எதிரான 11 குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து இந்த தண்டனை வழங்கப்பட்டதோடு, 90 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் அண்ணா பல்கலைகழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானதை அடுத்து தொடரப்பட்ட வழக்கில் ஞானசேகரன் குற்றவாளியாக மகளிர் நீதிமன்ற நீதிபதி எம்.ராஜலெட்சுமி கடந்த 28ஆம் தேதி தீர்ப்பளித்தார்.

இதனை தொடர்ந்து ஞானசேகரனுக்கு சலுகைகள் இன்றி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

********

முதலமைச்சர் - ஞானசேகரன்

பாலியல் குற்றவாளிகளுக்கு முன்விடுதலை கிடையாது என்று அண்மையில் தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட சட்ட திருத்தத்திற்கு ஏற்ப இவ்வழக்கில் நிவாரணம் உள்ளிட்ட எந்த சலுகையும் இல்லாமல் குற்றவாளிக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை வரவேற்பதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

********

கீதா ஜீவன்

பெண்களை மிரட்டி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கும் சமூக விரோதிகளுக்கு இந்த தீர்ப்பு பாடமாக இருக்கும் என்று மாநில சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஐந்தே மாதங்களில் இந்த வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பெண்கள் இனி தைரியமாக புகார் கொடுக்க இந்த தீர்ப்பு வழிகோலுவதோடு, ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டார்.

********

கே.ஆர்.பெரியகருப்பன்

தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் அடிப்படை தேவைகள் கண்டறியப்பட்டு உடனுக்குடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புனரியில் 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய மின் மாற்றியை திறந்துவைத்து பேசிய அவர் மின் பற்றாக்குறை ஏற்படும் இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

********

திருச்சி

திருச்சி மாவட்டத்தில் 5 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் முக கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தற்போது பரவும் கோவிட் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வாய்ஸ்

இதனிடையே பெரம்பலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தமிழகத்தில் கோவிட் தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து நோயை கட்டுப்படுத்த சுகாதாரத்துறை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

********

இருவரி

நாகை தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைகழகத்தில் இளநிலை பட்டப்படிப்பிற்கான விண்ணப்ப பதிவு இன்று தொடங்கியது.

மாணாக்கர் admission.tnjfu.ac.in என்ற இணையதளத்தில் வரும் 27ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம்.

இதனிடையே சென்னை அண்ணா பல்கலைகழகத்தின் பொறியியல் படிப்புகளுக்கு இதுவரை 2 லட்சத்து 76 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

**JEE** முதன்மை தேர்வு முடிவுகள் இன்று வெளியிட்டுள்ளன.

மாணாக்கர் தேர்வு முடிவுகளை result25jeeadv.ac.in என்ற இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம்.

**ஆபரேசன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் விதமாகவும்** ராணுவ வீரர்களை கவுரவிக்கும் வகையிலும் நடைபெற்ற மூவர்ண தேசிய கொடி அணிவகுப்பு இன்றுடன் நிறைவடைகிறது.

பிஜேபி சார்பில் மயிலாடுதுறையில் தேசிய கொடி அணிவகுப்பு ஊர்வலம் இன்று நடைபெற்றது.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்பிடி** விசைபடகுகளில் அதிக குதிரை திறன் கொண்ட எஞ்சின்கள் பொருத்தப்பட்டிருந்தால் உரிமம் ரத்து செய்யப்படும் என்று மாநில மீன்வளத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

**சிவகங்கை மாவட்டத்தில் ஆதரவற்ற மகளிர் நல** வாரியத்தில் நல திட்டங்களை பெற இன்றுமுதல் விண்ணப்பிக்க சிறப்பு முகாம்கள் நடைபெறுவதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

********

**டென்னிஸ்**

ஜெர்மனியில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் - ஜெர்மனியின் **Tom Gentzsch**–ஐ இன்று எதிர்கொள்கிறார்.

********

**செஸ்**

நார்வேயில் நடைபெறும் கிளாசிக்கல் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - நார்வேயின் மேக்னஸ் கால்சனை இன்று வென்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் குகேஷ் 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**